உ

ஓம் நமோ ரமணாய.

ஸ்ரீ ரமணீயம்.

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ ரமண பகவானின்

அவதார மகிமை கூறுவதொரு நூல்.

மதுரை
ஸ்ரீரமண தொண்டர்களு ளொருவரான,
திரு. சுப. ஐயாஸாமி ஐயரவர்கள்,
பாடியது.

மதுரை,
தமிழ்ச் சங்கத்து மாணவருள் ஒருவரான
உயர்திரு. மீ. கந்தசாமி பிள்ளை அவர்களால்
பரிசோதிக்கப்பட்டது.

22—11—1937.

மதுரை, சி. எம். வி. பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

கடவுள் வாழ்த்து.

(விநாயக வணக்கம்)

கசமுகன் றன்னைநாடிக் கருத்தினி லிருத்தி னோர்க்கு
வசமதே யாகி யையன் வழங்குவன் வேண தெல்லாம்
ரசமுடைப், பாலுந் தேனும் ருசியுள பாகுங் கூட்டி
நிசமதாய்ப் பணிந்து வந்தால் நிச்சய மாகுஞ் சித்தி.

சிவபெருமான்.

பண்டு கண்ணப்பப் பத்தனின் எச்சிலாம்
துண்டு மாமிசந் துய்த்தனன் ஒகையுட்
கொண்டு தன்கண் குருதியை மேலவன்
கண்டு துன்புறக் காட்டியோன் காக்கவே.

அம்பிகை வணக்கம்.

மதுரையிற் புரிவாய் ஆட்சி மகிமையுன் பெயர்மீ னாட்சி!
சதமுளத் திருத்தி யுன்னைப் பணிவவர் தஞ்சீ மாட்டி!
விதமுறு நின்னை யன்றி வேறுதெய் வம்பே ணார்க்குக்
கதமுறு காலர் தம்மைக் கடிந்தோம்பு வாய்கா மாட்சி!

முருகக்கடவுள் வணக்கம்.

பொதியின் வேந்தற்குப் போதித்தோன் ஞானத்தை
விதிமுதல் லரி விண்ணவர் கோனிவர்
துதிபு ரியுந்தன் தாதைக்கும் சொல்லிய,
அதிபன் ஏழையற் கும்மருள் செய்குவான்.

சுப்பிரமணியர் வணக்கம்.

சுப்பிர மணிய னுய சரோவரத்(து)
இப்பி றவிய றுத்திட ஏதுவாம்
விப்பிரர் போற்றிடும் வெள்ளிய புட்பமாய்ச்
சுப்பிர காசமாய்த் தோன்றுமெய்ஞ் ஞானமே.

அருள் வேண்டல்.

நாய்க்குண முடைய,வென்னை நாணவே செய்வா யப்பா
பேய்க்குண முழுதும் போக்கிப் பேதமே கருதா தென்னை
சேய்க்குண முடையோ னுகச் செய்குவாய் செயலேயப்பா
வாய்க்குநின் னருளே நாட்டி வகைபுரி சோதி நீயே.

காத்திட வேணு மென்னைக் கருணையே கொண் டிங்கென்மேல்
பார்த்திடு கடைக்க ணேக்கம் பங்கமே வாரா மற்றுன்
பேர்த்திடு மலமா யையாம் பேதமை சாரா தென்னை
ஏத்திட வுன்றன் னுமம் ஏகமாம் மனமே தாராய்.

கலைமகள் வணக்கம்.

வாணி! யுன்னை மகிழ்கண வன்ெறு
காணி பூமியுங் கோவிலுங் கொண்டிலன்
நாணி யுன்றனை நாவினிற் பெற்றதாற்
கோணி யோமனங் கோபித்தோ ஏகினன்.

திருமகள் வணக்கம்.

பதும வாசனி யைப்பணி வோரிடம்
புதுமை யாம்பல பொற்குவை சேருமால்
நிதமு,மே யவ ளைநினைந் தேநெஞ்சு
விதமதாய்க் கொண்டு மேவிடி னன்றரோ.

தமிழ்த்தாய் வணக்கம்.

முன்னை மாமலை சேர்முனி யால்வந்து
பின்னர்ப் பாண்டியர் பேணி வளர்த்திடத்
தென்னன் வைகை தவழ்ந்தெழு செந்தமிழ்
அன்னை பொன்னடி யாயதென் னுள்ளத்தே.

நூல்.

திருமகள்சேர் திருச்சுழியல் சுந்தரப்பே ரந்தணற்கும்
பெருமனையாள் அழகம்மை தமக்குஞ்சேர் குழவியதாய்க்
கருமமது வேதிரண்டு கனகசபை ரமணபரம்
திருமகவாய்த் தோன்றினன் மார்கழித்திருவா
[திரைத்தினமே.

2

மாமதுரைத் தலமதனில் மங்களஞ்சேர் பள்ளியினில்
மாமகிழ்வுற் றேவிரைவாய் வாசித்து வந்திடுநாள்
சோமனவன் றிருவருளால் செய்திடுவான் சிலசமயம்
காமமறக் களைந்துநிதம் கவலையற நிட்டைகொள்நாள்.

3

தனதுமனத் திடையுலகந் தன்மயமாய்க் கண்டிடவே
மனதுநிலை நாட்டியவன் மாயைதனைக் கொய்தனனே
எனதியான் என்னும்பற் றெள்ளளவும் நேராமல்
பனிதருநற் றுளிகமலப் பாசிலைமேல் நிற்பதுபோல்.

4

வயததுவும் பதினாறே வந்தடைய ஓர்நாளில்
உயர்தமது தமையனவன் உவகையொடு கற்பதற்கே
பயனதுவாம் பள்ளியுடைச் சம்பளந்தாந் தந்திடவும்
தயவுடனே ஓர்பகுதி தானெடுத்தே கினனருணை.

5

மங்களஞ்சேர் தங்கமவன் மாயையெலா மாய்ந்திடவே
திங்களணி சுந்தரன்றன் சேவையினைக் கண்டுகொண்டு
பொங்குசினப் புலிபுல்வாய்பொருந்தருணை வரையோர்பால்
தங்கினன் சின்மயனுஞ் சங்கரனைத் தானினைந்தே.

6

பற்பலமா தங்கள்வரைப் பாவையைப்போற் பலர்புகழத்
தற்பரனுத் தியானத்துச் சார்ந்துவரு நாளவனைக்
கற்களொடு பரல்வாரிக் கன்னெஞ்சர் தாக்கிடினும்
முற்றிலுமெய்ம் மறந்துபெரு முழுஞானத்
[துறையுறைவான்.

7

ஊரிலுளோர் யாவருமே ஒருங்கேவல் புரிந்தவற்குப்
பாரிலிவன் போலுமொரு தாபசியுண் டோவென்று
வாரியிவன் காமமுரு வாய்ந்ததொரு பேரருள்சேர்
பாரியதாம் பேரழகைப் பாரீர்பா ரீரென்பார்.

8

இந்தமுறை யிவணிருக்க இவன்றனைக்கா ணுமையினல்
பந்துசனம் எல்லோரும் பதைபதைத்துப் பலராக
வந்தவர்கள் மகிழ்பூப்ப வரையருணைத் தியானத்துச்
சிந்தைசெறிந் திருந்தானைச் சேமமொடு கண்டனரால்.

9

அன்னையவள் கன்றினைக்காண் ஆவெனவங் கடைந்துதவ
மன்னவனைத் தன்பின்னர் வருகவென உடனழைக்கத்
தன்னுயிர்த் தீன்றருட்குத் தவமடைந்தேன் பற்றிலையால்
என்னவரைந் துரைத்ததற்பின் னெய்தினன் மோனநிலை.

10

எத்தனைபே ரெத்தனையோ எடுத்துரைக்க அன்னவர்சொல்
லத்தனையுஞ் சித்தமதில் ஐயனவன் கொளாதொழியச்
சித்தனிவ னுமெனவே சிற்சிலமான் கள்மொழிய
பித்தனைப்போ லேகினளே பத்தனைப்பெற் றுள்பதிக்கே.

11

சுந்தரஞ்சேர் வேங்கடனும் சுதனவனை யேநினைந்து
சந்ததமுஞ் சிந்தையதே தகர்ந்திடுமாப் போலாகி
எந்தவிதம் எந்தன்மகன் எந்தனைவந் தடைவானென்
றிந்தவிதம் அன்னையவள் ஏங்கிடுவாள் நாடோறும்.

12

மாதங்கள் பலகடந்து மாதாவும் முடிவுடனே
காதங்கள் பலகடந்து கண்டிடவே சேயவனைப்
பாதங்கள் மெலிவடையப் பாலகனை யடைந்தவன்மேற்
கிதங்க ளொடுபுகழ்கள் கேட்டின்புற் றங்கிருந்தாள்.

13

தாயவளும் தன்மகன்பால் தங்கியுறைந் தேவரவும்
சேயவனும் சின்மயனுய்த் தியானமொடு சமாதியுறப்
பேயவாரம் சாமியெனும் பெரும்பொரு மைக்காரர்
நாயகனும் வேங்கடற்கின் னல்பலவாப் புரிந்தாரால்.

14

மலைபொருந்தும் குகையிருந்து மன்னுதவம் பலபுரிந்து
கலைபலவா வந்தடையக் காண்பவருள் ளங்கவர்ந்து
சிலையெனத்தன் பெயர்தோற்றித் தெய்வமுறு திறமேவிப்
புலையர்முத லந்தணரும் போற்றுநிலை பெறுமொருநாள்.

15

காலனவன் கடுகிடவே கருவுயிர்த்தீன் ருடன்னைப்
பாலனவன் வேங்கடவன் பந்தமிலா திருப்பினுமே
சீலமொடு பணிவிடைகள் செய்துவாத் திருமிகர்வாள்
மேலவளும் மேலுலகம் மேவினள்மேன் மையுறவே.

16

எச்சீவ னும்மொன்றே எனவெண்ணி யனைத்துயிரும்
உச்சீவிக் கக்கருணை யுள்ளத்துக் கொளும்ரமணன்
மெய்ச்சீர்சேர் அன்னையவள் மெய்யைநெருப் பிடாதிருந்து
வைச்செய்தி தன்கரத்தால் வகுத்தானோர் சமாதிமுறை.

17

அந்தமுறைச் சமாதியின்மீ தங்குள்ளார் பலர்சேர்ந்து
சுந்தரமாங் கோயிலெனச் சொலும்வண்ணஞ் சிலைநாட்டி
இந்தநாள் வரைநாளுக் கிருமூன்று முறையாகச்
சந்தமுறச் செய்கின்றார் தாயவளின் பூசனையே.

18

ஞானியையோர் மகனாக நற்றாய்பெற் றாள்பாக்யம்
மானிலத்து மற்றதனால் மாபாக்யம் எய்தினாள்
வானிலவள் எஞ்ஞான்றும் வானவர்போல் வாழமகன்
தானிடச்செய் கரதலத்தாற் சமாதிபெற்ற தொருபாக்யம்.

19

ஞாலமெலாம் ரமணன்புகழ் நாவலர்கள் கொண்டாடப்
பால்பிரிண்டன் முதலானோர் பணிந்துமுதற் பேறு
[பெற்றார்
காலமதில் ஒருசில்லோர் காமமறுத் திடவேண்டி
மேலதுவாம் வேங்கடனை மேவியடைந் திடவாரார்.

20

அன்னியநாட் டுள்ளோரும் அன்னவற்கண் டதுமுதலாப்
பின்னியதோர் பாசமெனும் பெரும்பாசம் நீங்கினராய்
நன்னயமார் தேசுருவம் நண்ணியகண் டாச்சரியத் (து)
இன்னமுமே பல்லோர்கள் எய்திடுவார் ஐயனடி.

21 வாழ்த்து

வாழி ஸ்ரீரம ணன்பதம் வாழியே
வாழி யன்னவன் பத்தரும் வாழியே
வாழி சீர்ச்சன் னிதிமுறை வாழியே
வாழி யாவரும் மாநிலம் வாழியே.

நூல் முற்றும்.

ஓம் தத்ஸத்.